முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1170

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.12.2022, திங்கட்கிழமை

1. பிரம்ம ஞானமே அரங்கா வாழ்க
பிரணவ சக்தியே தேசிகா வாழ்க
வரம்பல பெற்று என் சக்தியாகவே
வையகத்தை ஆள வந்த குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 26 ம் நாள் 12.12.2022, திங்கட்கிழமை)
ஊழ்போக்கும் மகா சக்தி உன்னிடத்தில்
உயர்வாக ஞானமாக கலந்து நிற்க
3. நிற்கவே கலியுக மக்கள் இதை உணர்ந்து
நிலமதனில் அரங்கனே நிலைத்தன்மை கொண்ட ஞானி என
வரம்தேடி உன்பால் வந்து சேர
வணங்கி உன் தொண்டை செய்ய
4. செய்யவே உலகோர்க்கு ஞான சித்தி
சிறப்பான ஜீவமுக்தியும் ஐயமற
ஆறுமுகன் என்னருளால் அகிலத்தார்
அடைந்து உயர நேரும்
5. நேர்மைபட உன் தொண்டில் கலந்து
நிலவுலகில் தர்மத்தை வளர்ப்பவர்க்கு
வளர்ப்பவர்க்கு பெருமைபட ஆறுமுகன் யான்
பிசகின்றி சர்வ சித்திகளும் வழங்கி
6. வழங்கியே அவர்களை கலியுகத்தில்
வல்லமைமிக்க அரங்கன் நீ தேர்வு செய்யும்
களங்கமற ஞானிகளாகப் படைத்து
கலியுகத்தையே ஞான யுகமாக மாற்றுவேன்
7. மாற்றுவேன் அரங்கன் உன்னைக் கொண்டே
மண்ணுலகில் அற்புதத்தை பலவாறு
ஆற்றுவேன் உலகோர் மகிழும் வண்ணம்
ஆறுமுகன் என் தலைமைகொண்ட ஞான ஆட்சியாக உருவாக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–